Makkal Kural



# சாய்ராம் மேலாண்மை கல்வி பேராசிரியர் மாறனுக்கு விருது

சென்னை, செப். 11–

சென்னையை அடுத்த மேற்கு தாம்பரம் ஸ்ரீ சாய்ராம் மேலாண்மை கல்வி பேராசிரியர் மாறனுக்கு இந்திய மேலாண்மை பள்ளி கல்வி நிறுவனங்களின் கூட்டமைப்பு சார்பாக இந்த ஆண்டிற்கான சிறந்த மேலாண்மை ஆசிரியர் தேசிய அளவிலான விருது வழங்கப்பட்டது. 28வது மேலாண்மை கல்வி கருத்தரங்கில் ஜார்க்கண்ட் மாநில ராஞ்சி பல்கலைகழகத்தில் ஜார்கண்ட் மாநில காதி மற்றும் கிராமோதய தலைவர் சஞ்சய்செத் விருது வழங்கி கவுரவித்தார்.

இவ்விருதிற்கு அகில இந்திய அளவில் மேலாண்மை கல்வி பேராசிரியர்களிடையே அதிக போட்டிகளிடையே இந்த சிறந்த ஆசிரியர் விருது வழங்கப்பட்டது. இவர் கடந்த 25 வருடங்களாக ஆசிரியர், ஆராய்ச்சி, பயிற்சி மற்றும் நிறுவன ஆலோசகராக பணியாற்றியதற்கும் மேலும் சுமார் 200 ஆராய்ச்சி கட்டுரைகளை தேசிய மற்றும் பன்னாட்டு இதழ்களில் வெளியிட்டுள்ளார்.

மேலும் 220க்கு மேற்பட்ட தேசிய மற்றும் பன்னாட்டு கருத்தரங்கில் சிறப்பு பேச்சாளாரகவும் கட்டுரை, ஆய்வு கட்டுரைசமர்பித்தல் மற்றும் பல ஆராய்ச்சி கலந்தாய்வில் பங்கேற்றது முக்கியத்துவம் வாய்ந்ததாகும், மேலும் 25 மேலாண்மை ஆராய்ச்சி மாணவர்களை உருவாக்கி உள்ளார். இவர் 4 மேலாண்மை புத்தகத்திற்கு ஆசிரியராகவும் 20க்கும் மேற்பட்ட மேலாண்மை புத்தகத்திற்கு தொகுப்பு ஆசிரியராகவும் பணியாற்றியுள்ளார். இதற்கும் மேலாக கடந்த 10 வருடங்கள் +2 மாணவர்களுக்கு எந்த துறையை தங்களது உயர்கல்விக்காக தேர்ந்தெடுக்கும் ஆலோசனையை பெற்றோர்களுக்கும், மாணவர்களுக்கும் கருத்தரங்கிலும், 500க்கும் மேற்பட்ட தொலைக்காட்சி நிகழ்ச்சியின் மூலமாக பல லட்சம் பெற்றோர், மாணவர்களுக்கு எவ்வித எதிர்பார்ப்பும் இன்றி மாண பர் சமுதாயத்திற்கு செய்து கொண்டு இருக்கிற பணிக்காக இந்த ஆண்டின் சிறந்த பேராசிரியர் விருது மாறனுக்கு வழங்கி கவுரவிக்கப்பட்டது.

இவ்விழாவில் சுமார் 500க்கும் மேற்பட்ட மேலாண்மை பேராசிரியர்கள், மேலாண்மை கல்வி இயக்குநர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.



ஸ்ரீ சாய்ராம் மேலாண்மை பேராசிரியர் மாறனுக்கு இந்திய மேலாண்மை கல்வி கூட்டமைப்பு சார்பாக ராஞ்சி பல்கலைகழகத்தில் நடந்த இந்த ஆண்டு சிறந்த ஆசிரியர் விருதை ஜார்கண்ட் மாநில காதி பிரமோதய தலைவர் சஞ்சய்செத் வழங்கினார். கூட்டமைப்பு தலைவர் மற்றும் முன்னாள் ராஞ்சி பல்கலைகழக துணை வேந்தர் எல்.என்.பகத் உடன் உள்ளனர்.

NOW INDIAN TIMES



# தேசிய அளவிலான சிறந்தமேலான்மை ஆசிரியர் விருது



சென்னை அடுத்த மேற்கு தாம்பரம்ஸ்ரீ சாய்ராம் மேலான்மை கல்வி பேராசிரியர் மாறன் அவர்களுக்கு இந்திய மேலான்மை பள்ளி கல்வி நிறுவனங்களின் கூட்டமைப்பு சார்பாக 2016 ஆம் ஆண்டிற்கான சிறந்த மேலான்மை ஆசிரியர் தேசிய அளவிலான விருது 28 வது மேலான்மை கல்வி கருதரங்கில் ஜார்க்கண்ட் மாநில இராஞ்ச் பல்கலைகழகத்தில் ஜார்கண்ட் மாநில காதி மற்றும் கிராமோதய தலைவர் சஞ்சய்செத் அவர்கள் விருது வழங்கி கௌரவித்தார்.

இவ்விருதிற்கு அகில இந்திய அளவில் மேலான்மை கல்வி பேராசிரியர்களிடையே அதிக போட்டிகளிடையே இந்த சிறந்த ஆசிரியர் விருது வழங்கப்பட்டது இவர் கடந்த 25 வருடங்களாக ஆசிரியர், ஆராய்ச்சி, பயிற்ச்சி மற்றும் நிறுவன ஆலோசகராக பனியாற்றியதிற்கும் இருக்கும் சுமார் 200ஆராய்ச்சி கட்டுரைகளை தேசிய மற்றும் பன்னாட்டு வெளியிட்டுள்ளார் மேலும் 220 க்கு மேற்பட்ட தேசிய மற்றும் இதழ்களில் வெளியிட்டு இருக்கிறார்

பன்னாட்டு கருத்தரங்கில் சிறப்பு பேச்சாளாரகவும் கட்டுரை, ஆய்வு கட்டுரை சமர்பித்தல் மற்றும் பல ஆரய்ச்சி கலந்தாய்வில் பங்கேற்றது முக்கியதுவம் வாய்ந்ததாகும், மேலும் 25 ஆராய்ச்சி மேலான்மை மாணவர் களை உருவாக்கி உள்ளார். இவர் 4 மேலான்மை புத்தகதிற்கு ஆசிரியராகவும் 20 க்கும் மேற்பட்ட மேலான்மை புத்தகதிற்கு தொகுப்பு ஆசிரியராகவும் பணியாற்றியுள்ளார். இதற்கு மேலாக கடந்த 10 வருடங்கள +2 மாணவர்களுக்கு எந்த துறையை தங்களது உயர்கல்விக்காக தேர்ந்தெடுக்கும் ஆலோசனையை பெற்றோர்களுக்கும், மாணவர்களுக்கும் பல கருத்தரங்கிலும், பல 500 கும் மேற்பட்ட தொலைகாட்சி நிகச்சியின் முலமாக பல லட்சம் பெற்றோர் மாணவர்களுக்கு எவ்வித வித எதிர் பார்ப்பும் இன்றி மாணவர் சமுதாயத்திற்கு செய்து கொண்டு இருக்கிற பனிக்காக 2016 ஆம் ஆண்டின் சிறந்த பேராசிரியர் விருது மாறன் அவர்களுக்கு வழங்கி கௌரவிக்கப்பட்டது. இவ்விழாவில் சுமார் 100க்கும் மேற்பட்ட மேலான்மை பேராசிரியர்கள், மேலான்மை கல்வி இயக்குநர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.

(ஸ்ரீ சாய்ராம் மேலான்மை பேராசிரியர் முனைவர் மாறன் அவர்களுக்கு இந்திய மேலான்மை கல்வி கூட்டமைப்பு சார்பாக இராஞ்சி பல்கலைகழகத்தில் நடந்த 2016 ஆம் ஆண்டு சிறந்த ஆசிரியர் விருதை ஜார்கண்ட் மாநில காதி பிரமோதய தலைவர் சஞ்சய்செத் அவர்கள் வழங்கினார். உடன் கூட்டமைப்பு தலைவர் மற்றும் முன்னால் இராஞ்சி பல்கலைகழக துணை வேந்தர் எல்.என். பகத் உட்பட பலர் கல்ந்து கொண்டனர்)

Centre for Entrepreneurial of Rs. 2 crore for the Srivastava of IT India.



Professor & Director K.Maran of Sri Sairam Institute of Management Studies, Chennai receiving the Best Teacher award from Jarkhand State Kaadhi Pramodaya Chairman Sanjay Seth at the function held at Ranchi University in the presence of L.N. Bhagat, former vice chancellor, Ranchi University.

The Hindu

தி இந்து செவ்வாய், செப்டம்பர் 13, 2016 CHENNAI 3

# சாய்ராம் மேலாண்மை கல்வி நிறுவன பேராசிரியருக்கு தேசிய விருது

■ சென்னை

இந்திய மேலாண்மை கல்வி நிறுவனங்களின் கூட்டமைப்பு சார்பாக, சாய்ராம் மேலாண்மை கல்வி நிறுவன பேராசிரியர் மாறனுக்கு தேசிய விருது வழங்கப்படுகிறது. பலத்த போட்டிக்கு இடையே 2016-ம் ஆண்டுக்கான 'தேசிய அளவிலான சிறந்த மேலாண்மை ஆசிரியர் விருது' இவருக்கு கிடைத்துள்ளது.




▶▶ ஸ்ரீ சாய்ராம் மேலாண்மை கல்வி நிறுவன பேராசிரியர் மாறனுக்கு 2016-ம் ஆண்டுக்கான தேசிய அளவிலான சிறந்த மேலாண்மை ஆசிரியர் விருதை வழங்குகிறார் ஜார்க்கண்ட் மாநில காதி கிராமோதய தலைவர் சஞ்சய்செத். உடன் இந்திய மேலாண்மை கல்வி கூட்டமைப்பு தலைவர் மற்றும் ராஞ்சி பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் எல்.என்.பகத்.

மாறன் கடந்த 25 ஆண்டுகளாக ஆசிரியர், ஆராய்ச்சி, பயிற்சி மற்றும் நிறுவன ஆலோசகராக பணியாற்றியுள்ளார். மேலும் 200-க்கும் மேற்பட்ட ஆராய்ச்சி கட்டுரைகளை தேசிய மற்றும் பன்னாட்டு இதழ்களில் வெளியிட்டுள்ளார், 220 தேசிய மற்றும் பன்னாட்டு கருத்தரங்கங்களில் சிறப்பு பேச்சாளராக பங்கேற்றுள்ளார். 25 மேலாண்மை ஆராய்ச்சி மாணவர்களை உருவாக்கியுள்ளார். 4 மேலாண்மை புத்தகங்களுக்கு ஆசிரியராகவும் 20-க்கும் மேற்பட்ட மேலாண்மை புத்தகங்களுக்கு தொகுப்பு ஆசிரியராகவும் பணியாற்றியுள்ளார்.

கடந்த 10 ஆண்டுகளாக பிளஸ் 2 மாணவர்கள் எந்த துறையில் உயர்கல்வி கற்கலாம் என பெற்றோர்களுக்கும், மாணவர்களுக்கும் ஆலோசனைகளை வழங்கி வருகிறார். 500-க்கும் மேற்பட்ட தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் மூலமாக மாணவர் சமுதாயத்துக்காக பணியாற்றி வருகிறார்.

இவரது இந்த சேவைகளை ஊக்குவிக்கும் வகையில் 2016-ம் ஆண்டின் சிறந்த மேலாண்மை ஆசிரியர் விருது மாறனுக்கு வழங்கப்பட்டுள்ளது. ஜார்க்கண்ட் மாநிலம் ராஞ்சி பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற 28-வது மேலாண்மை கல்வி கருத்தரங்கில் அந்த மாநில காதி மற்றும் கிராமோதய தலைவர் சஞ்சய்செத் விருதை வழங்கி கவுரவித்தார்.